முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்தஇந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் ஆடி மாதம் 22 திகதி முதல்

சுபகிருது வருடம் ஆடி மாதம் 29 திகதி வரை

(07.08.2022 ஞாயிறு முதல் 14.08.2022 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. கலித்துன்பம் போக்கி மீட்க
   கந்தவேலன் சக்தியாக வந்த
   அழியாமை பெற்ற ஞானகுருவே
   அரங்கனே நீ கேட்க வார ஆசி தனை
2. ஆசிதனை இந்தியா தமிழகத்தில்
   அறிவிப்பேன் சுபகிருது நள்ளித்திங்கள்
   பேசிட இருபானீர் திகதிமேல் இருபான் நவ திகதி வரை
   புகலுவேன் நிகழ்வாக எதிர்கால பலன் குறித்து
3. குறித்துமே அகத்திய மகரிஷி யானும்
   கூறிடுவேன் வார ஆசிதனை
   வறுமை பற்றாத வண்ணம்
   வரிச்சுமை கூடாத வண்ணம்
4. வண்ணமுடன் ஆளுமை காணவே
   வளர்ச்சிதனை இந்தியா தமிழகம்
   திண்ணமுடன் காணக் கூடும்
   திட்டங்கள் வழி முதலீடுகள் யாவும்
5. யாவும் ஞானவான்கள் கொண்ட
   உயர் குழுக்கள் ஆலோசனைபட
   அவசியம் செயல்பாடு காணவே
   அபகரிப்பு நட்டமிலா அரங்கேற்றமாகி
6. ஆகியே திட்டம் மக்களிடை
   அமைந்திடும் முழுமைபடவே
   மகிழவே மக்களை காக்கும்
   மகத்தான ஆளுமை தன்னை
7. தன்னையே இந்தியா தமிழகம்
   தயவாக நடத்தி வருகவே
   இன்னும் ஆதரவுகள் பெருகி
   இணையிலா வல்லமை கூடும்
8. கூடவே மக்களிடை இருந்து
   குறிப்பாக வருவாய்பெறுகின்ற
   இடரில்லா அனைத்துத் துறைகளும்
   எந்த ஊழல் தன்மையும் இல்லா

9. இல்லா தயவாய் செயல்பட
எங்கும் பணிகள் முடைபடா
வல்லமைபட சகல துறைகளும்
வளர்ச்சி கண்டு உபரியே தங்கும்

10. தங்கும் தேங்கும் பற்றாக்குறை விலகி
தகாத முறைகேடுகளும் விலகி
ஓங்காரன் ஆசிபட இந்தியா தமிழகம்
உயர்வான வளர்ச்சிதனை காண்கும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சுபகிருது வருடம் ஆடி மாதம் 22ம் நாள் 07.08.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆடி மாதம் 29ம் நாள் 14.08.2022 ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள கால நிகழ்வுகள் :

கலியுகத்தின் கோரப்பிடியுள் சிக்கி துன்பப்படுகின்ற உலக மக்களை கலியுக துன்பத்தில் இருந்து மீட்க முருகப்பெருமானின் சக்தி வடிவமாக அவதரித்திட்ட ஞானகுருவே அழிவிலாத நிலையை பெற்றிட்ட ஆறுமுக அரங்க மகானே தாம் இவ்வுலகின் எதிர்காலம் குறித்து கேட்க அகத்திய மகரிஷி யானும் இந்தியா தமிழகத்தில் சுபகிருது வருடம் ஆடி மாதம் 22ம் நாள் 07.08.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆடி மாதம் 29ம் நாள் 14.08.2022 ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள கால நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

நாட்டு மக்களுக்கு வறுமை உண்டாகாமல் அரசு பார்த்துக் கொள்வதோடு மக்களின் மீது சுமத்தப்படுகின்ற வரிச்சுமையும் கூடாத வாறும் பார்த்துக்கொள்ள வேண்டும். அவ்விதம் மக்களை பாதிக்காதவாறு வரி விதிப்புடன் செயல்பட இந்தியா தமிழகம் உறுதியாக வளர்ச்சி அடையும்.

அரசின் திட்டங்கள் யாவும் ஞானவான்கள் அறிஞர்கள் துணைபட உயர் மட்ட குழுக்களை அமைத்து செயல்படுத்த அந்த திட்டங்கள் அபகரிப்பு இல்லாமல் நஷ்டம் இல்லாமல் செயல்படுத்தப்பட்டு திட்டத்தின் நோக்கமும் பயன்களும் முழுமையாக மக்களை சென்று அடைவதோடு லாபகரமாகவும் அமைந்திடுமப்பா. இந்த வித செயல்பாடுகளினால் மக்களும் மகிழ்வர்.

மக்களைக் காக்கின்ற மகத்தான ஆட்சிமுறையை இந்தியா தமிழகம் தயவின் அடிப்படையில் நடத்தி வரவர நாட்டிற்கு ஆதரவுகள் பெருகி ஈடுஇணை யில்லாத வகையில் வல்லமையும் பெருகும் திடமான ஆட்சியும் உண்டாகும்.

மக்களிடம் இருந்து வருவாய் பெறுகின்ற அனைத்து துறைகளும் எந்தவிதமான ஊழல்களும் இல்லாமல் மக்களிடத்து தயவுடன் செயல்பட தேசமெங்கும் பணிகள் எந்தவிதமான தடையும் இன்றி நடப்பதோடு அவை மேன்மேலும் வல்லமையுடன் வளர்ச்சி அடைந்து உபரி வருவாயும் உண்டாகி நாட்டின் பொருளாதார நிலை மேம்பாடு அடையும் பற்றாக் குறை நிலைமைகள் யாவும் மாறிடும். தவறான வழியில் துறைகள் அனைத்தும் செல்லாமல் பாதுகாக்கப்பட்டு அவற்றினில் இதுவரை இருந்திட்ட முறைகேடுகளும் விலகி ஓங்காரன் முருகப்பெருமான் ஆசிபட இந்தியா தமிழகம் உயர்வான வளர்ச்சி நிலையை அடைந்திடும் எனக்கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–